# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.45/2019 நாள். 30.08.2019

## தனி அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் 2019 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்

30.8.2019ம் நாள் வெள்ளிகிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் ஆகஸ்ட் 2019 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | ஆகஸ்ட் 2019 | 1 | 0 | 12 | 5 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2019 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

16.08.2019ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | லட்சுமி நகர் பகுதியில் 6.00 மீட்டர் உயரம் கொண்ட மின் கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்தல் பணி | 9.50 | மெசஸ்.லஷ்மி எண்டர்பிரைசஸ்<br>மெசஸ். மகாலஷ்மி எண்டர்பிரைசஸ் | 0.10 % குறைவு<br>1.40 % அதிகம் |
| 2. | சீனிவாசபுரம் பகுதியில் 6.00 மீட்டர் உயரம் கொண்ட மின் கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்தல் மற்றும் | 9.50 | மெசஸ்.லஷ்மி எண்டர்பிரைசஸ்<br>மெசஸ். மகாலஷ்மி எண்டர்பிரைசஸ் | 0.10 % குறைவு<br>1.40 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றுதல் பணி | | | |
| 3. | சீனிவாசபுரம் விரிவு பகுதியில் 6.00 மீட்டர் உயரம் கொண்ட மின் கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றுதல் பணி | 9.50 | மெசஸ்.லஷ்மி எண்டர்பிரைசஸ்<br>மெசஸ். மகாலஷ்மி எண்டர்பிரைசஸ் | 0.10 % குறைவு<br>1.40 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண். 4</u>

30.08.2019ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | லஷ்மி நகர் பூங்கா செல்லும் முன் பகுதியில் சர்வீஸ் சாலை இணைப்பு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 8.80 | கே.ஜெயசீலன்<br>ஜி.சுரேஷ் | 4.60 % அதிகம்<br>5.40 % அதிகம் |
| 2. | லஷ்மி நகர் முதல் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 8.20 | ஜி.சுரேஷ்<br>கே.ஜெயசீலன் | 4.80 % அதிகம்<br>5.80 % அதிகம் |
| 3. | லஷ்மி நகர் 30 அடி சாலையில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 9.80 | ஆர்.செந்தில் குமார்<br>ஏ.சிவா | 4.85 % அதிகம்<br>5.90 % அதிகம் |
| 4. | லஷ்மி நகர் 30 அடி சாலை பூங்கா பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 10.00 | ஆர்.செந்தில் குமார்<br>ஏ.சிவா | 4.65 % அதிகம்<br>5.80 % அதிகம் |
| 5. | லஷ்மி நகர் இரண்டாவது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 7.50 | எம்.நித்தியானந்தம்<br>ஜி.சுரேஷ் | 4.70 % அதிகம்<br>5.55 % அதிகம் |
| 6. | லஷ்மி நகர் பூங்கா முதல் அடையாறு ஆறு சாலையில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 7.50 | ஏ.சுசீலா<br>எம்.ஆஷா | 4.75 % அதிகம்<br>5.80 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

1. மதிப்பீட்டுத் தொகைக்கு கூடுதலாகும் செலவினத்தை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.5</u>

**27.08.2019**ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி அலுவலக மேற்கூரையில் பொது சுகாதார பிரிவு பொருட்களை வைப்பதற்கு அறை அமைத்தல் பணி | 5.00 | மெசஸ்.டி கே இண்டஸ்ரியல்<br>வி.குணாளன் | 0.10 % குறைவு<br>1.40 % அதிகம் |
| 2. | கஸ்தூரிபாய் நகர் மயானத்தில் உள்ள Onsite Compost Centre–ஐ சுற்றி கிரில் கேட் (Weld Mesh) அமைத்தல் மற்றும் சாலைப்பகுதியில் பேட்ச் ஒர்க் செய்தல் பணி | 5.00 | வி.குணாளன்<br>மெசஸ்.டி கே இண்டஸ்ரியல் | 0.10 % குறைவு<br>1.20 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.6</u>

**22.08.2019**ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.16 அன்னை மேரி 3வது தெருவில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 2.00 | கே.ஜெயசீலன்<br>ஆர்.செந்தில் குமார் | 0.15 % குறைவு<br>1.40 % அதிகம் |
| 2. | நகராட்சி குடிநீர் வாகனம் டிஎன் 22 ஏபி 4255 பழுது பார்த்து பணி மேற்கொண்டு தகுதி சான்று பெறுதல் பணி | 2.50 | மெசஸ். ராதாகிருஷ்ணன் ஆட்டோ ஒர்க்ஸ்<br>மெசஸ்.மகா சக்தி பாடி ஒர்க்ஸ் | 0.10 % குறைவு<br>1.20 % அதிகம் |
| 3. | அயோத்தியம்மன் கோயில் தெரு மற்றும் | 2.00 | ஆர்.செந்தில் குமார்<br>கே.ஜெயசீலன் | 0.12 % குறைவு<br>1.50 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | லேபர் பள்ளி தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி | | | |
| 4. | அனகாபுத்தூர் நகராட்சி காமராஜர் சாலை மற்றும் ஜே.என். சாலையில் பி.வி.சி பைப்லைன் அமைத்தல் பணி | 4.00 | மெசஸ்.ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ் மெசஸ்.எஸ் வி பி எலக்ட்ரிகல்ஸ் | 0.15 % குறைவு 1.60 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.7</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் உள்ள பசுமை உரக்குடிலில் உள்ள எரியூட்டப்பட தகுதியான கழிவுகளை அரியலூர் மாவட்ட சிமெண்ட் நிறுவனத்திற்கு பேக்கிங் செய்து அனுப்ப தேவையான பொருட்கள் சப்ளை செய்தல் பணிக்கு ரூ.3.00 இலட்சத்திற்கு தீர்மான எண்.476 நாள்.31.01.2019ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இப்பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை குறைவாக உள்ளதால், பணி தொடர்ந்து நடைபெற்று வருவதால், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3.00 இலட்சம் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : பணியின் அவசர அவசியம் கருதி கூட்டம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.8</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை பொது நிதி அல்லது சட்டமன்ற உறுப்பினர் திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.5 பெரியார் தெரு மற்றும் வார்டு எண்.4 கண்ணகி தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 9.50 |
| 2. | வார்டு எண்.4 பல்லவன் தெரு பகுதி மற்றும் 1வது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 8.50 |
| 3. | வார்டு எண்.4 பல்லவன் தெரு பகுதி மற்றும் 2வது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 6.50 |

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. மேற்கண்ட பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் திட்ட நிதி ஒதுக்கும் பட்சத்தில் நிதியினை ஈடு செய்து கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.9</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுத்து பொருட்கள் கூட்டுறவு சொசைட்டி மூலம் பொருட்கள் சப்ளை செய்ய **14.08.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு இரண்டு கூட்டுறவு சொசைட்டி நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | ஜார்ஜ் டவுன் பல்நோக்கு தொழில் கூட்டுறவு சங்கம், 9–ஏ, தேனாம்பேட்டை ராமசாமி தெரு, கொன்டிதோப்பு சென்னை-79 | அன்னை சிவகாமி மகளிர் தொழில் கூட்டுறவு சங்கம், எண்.1, பிள்ளையார் கோயில் 1வது தெரு சந்து, சென்னை –79 |
|---|---|---|---|
| | | (விலை ஒன்றுக்கு) | |
| 1. | HP Toner 88A | 5800.00 | 5850.00 |
| 2. | சமுதாய நல கூடம் பதிவு படிவம் | 5.00 | 5.20 |
| 3. | 1 Q Register ( ruled ) | 125.00 | 130.00 |
| 4. | 2 Q Register ( ruled ) | 325.00 | 330.00 |
| 5. | மேல் உரைத்தாள் | 8.50 | 9.00 |
| 6. | Property tax notice 7 day notice | 4.00 | 4.50 |
| 7. | Property tax notice 3 day notice | 4.00 | 4.50 |
| 8. | Property tax notice 24 day notice | 4.00 | 4.50 |
| 9. | Revenue Assistant Diary | 590.00 | 600.00 |
| 10. | File pad | 56.00 | 60.00 |

<u>**அலுவலகக்குறிப்பு:**</u> குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஜார்ஜ் டவுன் பல்நோக்கு தொழில் கூட்டுறவு சங்கம்,, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.10</u>

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.10834/2017/WS நாள் **09.08.2019** தேதியிட்ட கடிதத்தில் "UTI-Online Grievance Redressal System" ன்படி நகராட்சியின் நகர வரைபடம் Shape file format–ல் தயார் செய்து **30.09.2019**க்குள் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து இந்நகராட்சியில் நகர வரைபடம் Shape file format–ல் தயார் செய்ய குறுகிய கால ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.**3.00** இலட்சத்திற்கும், **2019–20**ம் ஆண்டிற்கு பொது நிதியில் செலவு மேற்கொள்ள நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கு மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.965/2019/எப்1 )

<u>பொருள் எண்.11</u>

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.10834/2017/WS நாள் 09.08.2019 தேதியிட்ட கடிதத்தில் "UTI-Online Grievance Redressal System" ன்படி நகராட்சியின் நகர வரைபடம் .Shape file format–ல் தயார் செய்ய 16.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | HAGROIS , எண்.5, எம்.பி.ஏ. சர்ச் தெரு, எஸ்.எஸ்.நகர் விரிவு, திருமுல்லைவாயில் சென்னை-62 | The Atens Charitable and Educational Trust, எண்.47, ராமமூர்த்தி நகர் , திருவண்ணாமலை –606601. |
|---|---|---|---|
| | | (விலை ஒன்றுக்கு) | |
| 1. | GIS survey Based Town, Map preparation for Anakaputhur Municipality that includes all streets with names , municipality boundary, ward boundary , water bodies, OHTs. Parks, schools, Government buildings, MCC sites, Burial grounds, ect., SHP file format | 2.99 | 3.10 |

<u>அலுவலகக்குறிப்பு</u> குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள HAGROIS சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.12</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ள தேவையான மண்வெட்டி, கடப்பாறை, பாண்ட், அன்னக்கூடை, ரெயின் கோட், கால்சூ(இரப்பர்), கையுறை, குடை, நைலான் ரோப்பு,Tool Valve, கிரின் ஒஸ் மற்றும் தேவையான பொருட்கள் வாங்கி இருப்பில் வைத்துக் கொள்ள ஆகும் தோரய செலவினத் தொகை ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. செலவினத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.13</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், வடகிழக்கு பருவமழை அதிகபடியாக பெய்தால் நகராட்சி பகுதியில் ஏற்படும் அடைப்புகள் பொது மக்களுக்கு பாதிப்புகள் எதும் ஏற்படாமல் உடனுக்குடன் பணி செய்ய வேண்டியுள்ளதால் கூடுதலாக லாரி, ஜே.சி.பி வாடகை அடிப்படையில் தயார் நிலையில் வைத்துக்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.
**2.**செலவினத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வாங்கலாம்.

<u>பொருள் எண்.14</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், வடகிழக்கு பருவமழை அதிகபடியாக பெய்து அருகில் உள்ள அடையாறு ஆற்றில் வெள்ளபெருக்கு அதிகபடியாக ஏற்பட்டால் கரையை ஒட்டியுள்ள வீடுகளில் உள்ள பொது மக்கள் நகராட்சி பகுதிகளில் உள்ள பள்ளிக் கட்டிடங்களில் பாதுகாப்பாக தங்க வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் உடன் செய்து கொடுக்க் வேண்டிதன் அவசியத்தை கருதி மின்சார தடை ஏற்படும் போது உடன் மின் சப்ளை வழங்க வேண்டிய அவசியம் கருதி வாடகை அடிப்படையில் 4 எண்ணிக்கை ஜெனரேட்டர் இருப்பில் வைத்துக்கொள்ள ஆகும் ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.
**2.**செலவினத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வாங்கலாம்.

<u>பொருள் எண்.15</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை வேண்டி சுகாதாரப் பணியின் அவசியம் கருதி பிளிச்சிங் பவுடர் 1 டன் வாங்கி இருப்பில் வைத்துக்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.
**2.** அரசு அங்கீகாரம் பெற்றுள்ள காமதேனு சூப்பர் மார்கெட்டில் நேரடியாக கொள்முதல் செய்யவும், செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

<u>பொருள் எண்.16</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை வெள்ளத்தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மணல் மூட்டைகள் மற்றும் சவுக்கு கொம்புகள் இருப்பில்

வைத்துக்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.1,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.செலவினத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

<u>பொருள் எண்.17</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை வெள்ளத்தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், இந்நகராட்சியில் இருப்பில் உள்ள ஆயில் இன்ஜின்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு தயார் நிலையில் வைக்க வேண்டியுள்ளதால், டீசல் இன்ஜின்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.80,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.செலவினத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

<u>பொருள் எண்.18</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் கிரைண்டர், குளிர்சாதன பெட்டி பழுதடைந்துள்ளதால், அவற்றினை மாற்றி புதிய பொருட்கள் வாங்க ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.90,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.செலவினத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

<u>பொருள் எண்.19</u>

இந்நகராட்சி 18 வார்டு பகுதிகளில் கொசுக்புழு ஒழிப்பு மற்றும் டெங்கு தடுப்பு பணிகளுக்கான Dengue Breeding Checkers என்ற கொசு ஒழிப்பு பணியாளர்கள் 41 நபர்கள் பேன்சி ஏஜென்சி நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்யப்பட்டு வந்தது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை — 05, மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில் கொசு ஒழிப்பு களப்பணியாளர்களை தொடர்ந்து பயன்படுத்தி கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேற்படி அறிவுறுத்தலின்படி கொசு ஒழிப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்ள ஆகஸ்ட் மற்றும் செப்படம்பர் 2019 முதல் மறு ஒப்பந்தபுள்ளி கோரும் வரை ஏற்படும் தோராய செலவின தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.20</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவுகளில் உள்ள கணினிகள் மற்றும் பிரண்டர்கள் அதனை சார்ந்த உபகரணங்கள் ஒர் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்படியான ஒப்பந்த பணிக்காலம் ஜுலை 2019 மாதம் இறுதியில்

முடிவடைவுள்ளதால் ஆகஸ்ட் **2019** ம் மாதம் ஓர் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.**3.00** இலட்சத்திற்கும், **2019–20**ம் ஆண்டிற்கு பொது நிதியில் செலவு மேற்கொள்ள நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இந்நகராட்சி கணினிகள் பராமரிப்பு பணி என்பது முக்கியமான பணி என்பதால் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.21**

அனகாபுத்தூர் நகராட்சியில் உள்ள அனைத்து கணினிகளுக்கு ஆண்டுதோறும் ( Anti Virus Maintenance ) ஆண்டி வைரஸ் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்படியான ஒப்பந்த பணிக்காலம் ஜூலை **2019** மாதம் இறுதியில் முடிவடைவுள்ளதால் ஆகஸ்ட் **2019** ம் மாதம் ஆண்டி வைரஸ் பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.**3.00** இலட்சத்திற்கும், **2019–20**ம் ஆண்டிற்கு பொது நிதியில் செலவு மேற்கொள்ள நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இந்நகராட்சி கணினிகள் பராமரிப்பு பணி என்பது முக்கியமான பணி என்பதால் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.22**

இந்நகராட்சிக்கு போதிய பணியிடங்கள் தோற்றிவிக்கப்படாத நிலையில் அவ்வபோது அலுவலக பணிகள் மேற்கொள்வதில் தோய்வு ஏற்படுகிறது. அவசர அவசிய பணிகள் குறித்த அறிக்கைகள் அனுப்புவதற்கு காலதாமதம் எற்படுகிறது. இந்நிலையில் தட்டச்சு பணியிடம் தோற்றிவிக்கப்படவில்லை, தட்டச்சர் யாரும் இல்லை என்பதாலும், போதிய அளவில் இளநிலை உதவியாளர் பணியிடம் தோற்றிவிக்கப்படவில்லை என்பதால் பணிகள் மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. நிர்வாக நலன் கருதி பணிகளை உடனுக்குடன் முடிக்க **2** பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் **2019–20**ம் ஆண்டு தினக்கூலி விலை விகித அடிப்படையில் ஒப்பந்ததரார் மூலம் பணிகள் மேற்கொள்ள சேவை வழங்கும் தனியார் நிறுவனங்கள் நியமனம் செய்து பணி மேற்கொள்ளும்போது அதற்காக ஏற்படும் தோராயன செலவினங்களை ரூ.**3.00** இலட்சம் பொது நிதியிலிருந்து வழங்கிட நகர மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்,
அனகாபுத்தூர் நகராட்சி.